**ஜனவரி - 2**

**"நீங்கள் உங்களுடையவர்களல்லவே கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள். ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." - 1கொரி 6:19,20**

நாம் நம்முடையவர்களல்ல என்றும் ஆனால் மற்றொருவருக்குச் சொந்தமாயிருக்கிறோம் என்றும், ஆகையால் நாம் நம்மையே பிரியப்படுத்த நாடக்கூடாதென்றும் ஆனால் அவரைப் பிரியப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என்றும், நமக்கே ஊழியஞ்செய்ய நாடக்கூடாதென்றும், ஆனால் அவருக்கே ஊழியஞ்செய்ய வேண்டுமென்றும், சுயசித்தத்துக்குக் கீழ்ப்படிய நாடாமல், அதற்குமாறாக அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றுள்ள இந்தப் படிப்பினைகளைவிட நமக்கு அதிகமாக முக்கியமாயிருக்கக்கூடிய வேறு எந்தப் படிப்பினை புது வருஷ ஆரம்பத்திலிருக்கிற நமக்கு இருக்கக் கூடும்? இது இந்த வார்த்தையின் மிகவும் பூரணமான பரந்த அர்த்தத்தில் பரிசுத்தத்தைக் குறிக்கிறதது. பாவத்திலிருந்து பிரிந்து நீதிக்குட்பட்டிருப்பதை மட்டுமல்லாமல், தன்னிலும் உலகத்திலுமிருந்து பிரிந்து கிறிஸ்துவில் தேவனுடைய சித்தத்துக்குளிருப்பதைக் குறிக்கிறது. **Z ’97, 35 (R 2097).**

சிருஷ்டிப்பு, பரிசுத்தமாக்குதல் ஆகிய இவைகளின் காரணமாக மட்டுமல்ல, ஆனால் இரட்சிப்பின் காரணமாகவும் தேவனுடைய ஜனங்கள் அவருடையவர்களாயிருக்கிறார்கள். ஆகையால், தங்களுக்குண்டான எல்லாம் தாங்களும் தங்களை சொந்தமாக உடையவரும் தங்களை சிருஷ்டித்தவருமான தேவன்மேல் நன்மதிப்பைப் பிரதிபலிக்கச் செய்ய வேண்டுமென்பதே தகுந்ததாகவும் நியாயமானதாயும் இருக்கிறது. இந்த நியாயமான காரியத்தை அவர்கள் தங்களுடைய எல்லா விசுவாசத்தின் பலத்தோடும், நம்பிக்கையின் பலத்தோடும், அன்பின் பலத்தோடும், கீழ்ப்படிதலின் பலத்தோடும் செலுத்த வேண்டும். ஏனென்றால், இதற்கும் குறைவானது உகந்ததல்லாததும், அநுசிதமானவையுமாயிருந்தன. **-P ’29, 189.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**மத் 20:28; 1தீமோ 2:5,6; அப் 20:28; வெளி 5:9,14:4,5; 2கொரி 5:14,15; தீத் 2:14; 1கொரி 7:23; 10:31; கலா 3:13; எபி 9:12; 1பேது 1:18; 2:9; மத் 5:16; யோவா 15:8; பிலி 1:9-11.**

**கோபுர வாசிப்பு : Z ’10, 199 (R 4632).**

**வினாக்கள் : இந்த வசனம் இந்த வாரத்தில் எனக்கு என்னவாயிருந்தது? எந்தச் சந்தர்ப்பங்களின் மத்தியில்? பலன்கள் என்ன?**